**IN THE COURT OF II JUDGE, SMALL CAUSES, CHENNAI**

---

**M.C.O.P.No.2176/2020**

Deposition of Witness : PW 1
Name : Balaji Singh
Father Name : Radhakrishnan Singh
Age : 58 years
Designation : --

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 07th day of April, 2025.

---

**முதல் விசாரணை –**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய தரப்பில் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதனை என்னுடைய முதன்மை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| Sl.No. | Descriptions | Nature of documents | Remarks |
|---|---|---|---|
| 1 | Accident register copy | Photocopy | Ex.P.1 |
| 2 | First information report | Truecopy | Ex.P.2 |
| 3 | RC Book | Photocopy | Ex.P.3 |
| 4 | Insurance Policy | Photocopy | Ex.P.4 |
| 5 | Driving License of Driver | Photocopy | Ex.P.5 |
| 6 | Discharge summary | Original | Ex.P.6 |
| 7 | Medical bills | Original | Ex.P.7 |
| 8 | Driving license of petitioner | Photocopy | Ex.P.8 |
| 9 | Petitioner working ID Card and working permit card | Original | Ex.P.9 |
| 10 | Petitioner salary slip | Original | Ex.P.10 |

| | | | |
|---|---|---|---|
| 11 | Pan card of petitioner | Photocopy | Ex.P.11 |
| 12 | Aadhar card of petitioner | Photocopy | Ex.P.12 |
| 13 | Disability certificate and book issued by Department Welfare Office (60%) | Photocopy | Ex.P.13 |
| 14 | Bank passbook of petitioner | Photocopy | Ex.P.14 |
| 15 | X Ray | Original | Ex.P.15 |
| 16 | Family card of petitioner | Photocopy | Ex.P.16 |

(ம.சா.ஆ.7 ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை –**

என் மீது மோதிய வாகனத்தை சுமார் 10 அடி துாரத்தில் பார்த்தேன். அந்த வாகனம் சரியான பாதையில் வந்தது என்றால் சரியல்ல, வலதுபக்கம் ஏறிவந்தது. 1வது எதிர்மனுதாரர் வாகனம் சரியான திசையில் வந்தது என்றும், அதை பார்க்காமல் நான்தான் விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. ஜனவரி 2022க்கு பிறகு தொடர்சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.7 மருத்துவ இரசீதுகளில் 12.01.2022 தேதியிட்ட பார்வதி மருத்துவமனை இரசீதில் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கு கையொப்பம் இல்லை என்றும், அதனால் அந்த தொகையை கேட்கமுடியாது என்றால் சரியல்ல. நான் செய்த Security வேலையில் விபத்திற்கு பிறகு என்னை நீக்கிவிட்டார்கள் என்பதற்கு ஆவணம்

தாக்கல் செய்யவில்லை. விபத்திற்கு பிறகு நான் வேலைக்கு செல்லவில்லை, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், அதனால் 2வது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. காப்பீடு விதிமீறல் உள்ளது என்றும் அதனால் 1வது எதிர்மனுதாரர்தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல. இந்த மனுத்தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd./

Signature of witness

Taken down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date: 7.4.2025

Sd./
II Judge
Court of Small Causes, Chennai